## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 9 /PW- 10 |
| Name | : திரு. ஸ்ரீநாத் ஐயங்கார் |
| Father/Husband's Name | : ரங்கநாதன் |
| Village | : ரெசிடன்சி விலாசா |
| Taluk | : 2 வது தெரு, ஆர்கே நகர் |
| Caste | : ஆர்ஏ புரம், சென்னை 28 |
| Calling | : |
| Religion | : |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2026.

PADW for Accused. Counsel for the accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது வழக்கறிஞராக சென்னை உயர்நீதிமன்றத்தில் பணிபுரிகிறேன். கடந்த 04.06.2022 அன்று சுமார் மாலை 04.45 – 05.00 மணியளவில் வனஜா என்பவர் 4 நபர்களுடன் சிஐடி நகரிலுள்ள எனது அலுவலகத்திற்கு வந்தார்கள். வனஜா என்பவர் மீதுள்ள சைபர் கிரைம் வழக்கு சம்மந்தமாக ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது சம்மந்தமாக அறிவுரை கேட்டு வந்தார்கள். ஆனால் வனஜா என்பவர் கையில் எந்த ஆவணமும் இல்லை. நான் ஆவணங்களை பார்க்காமல் எந்த அறிவுரையும் கூறமுடியாது என்று கூறியதால் அவர் எங்கள் அலுவலகத்திலிருந்த கணினியை பயன்படுத்தி வனஜாவின் இமெயிலிருந்து ஆவணங்களை எடுத்து தருவதாக சொன்னார். நான் எங்கள் அலுவலகத்திலிருந்து கனினியை பயன்படுத்துவதற்காக கொடுத்தேன். வனஜா அவரது இமெயிலிருந்து 4 ஆவணங்களை டவுன்லோடு செய்து கொடுத்தார். அந்த 4 ஆவணங்கள் நோட்டிஸ், 2 பக்கங்கள் கொண்ட இமெயில், அதனுடன் சேர்ந்த அட்டாச்மெண்ட், பிரிவு 41 (ஏ) ன்

கீழ் போலிசார் கொடுத்த ஒப்புதல் ஆவணம் ஆகியவற்றை கொடுத்தார். நான் அவர் கொடுத்த ஆவணத்தை படித்தவுடன் வனஜாவிடம் சில கேள்விகளை கேட்டேன். அந்த கேள்விகளுக்கு அவர் பதில் கொடுக்கவில்லை. சுமார் 5 நிமிடத்திற்கு பிறகு வனஜா எழுந்து கிளம்பி சென்றுவிட்டார். அதன் பிறகு அவர் வரவில்லை. போலிசார் என்னை நோட்டீஸ் அனுப்பி வரவைத்து என்னை விசாரித்தார்கள். அப்போது நான் தற்போது கூறிய விவரங்களை தான் சொன்னேன். போலிசார் என்னிடம் என்னுடைய ஐபி அட்ரஸ் அவர்களது பட்டியலில் வந்ததால் விசாரணைக்கு அழைத்ததாக கூறினார்கள். சாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட ஸ்டேட்மெண்ட் தான் கொடுத்தது தான். **<u>அந்த ஸ்டேட்மெண்ட் அதசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** எதிரி தரப்பு வழக்கறிஞர் போலிசாரிடம் மேற்படி வாக்குமூலம் கொடுக்கப்பட்டதால் அதை குறியீடு செய்ய முடியாது என்று ஆட்சேபனை செய்தார். ஆட்சேபனைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. என்னால் வனஜாவை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியாது. அவர் எனது அலுவலகத்தில் சிறிது நேரம் தான் இருந்தார். போலிசாரிடம் நான் வாக்குமூலம் தான் கொடுத்தேன். மற்ற ஆவணங்கள் போலிசாருடையது. போலிசார் என்னை 26.09.2022 அன்று விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

வனஜா என்பவர் எனது அலுவலகத்திற்கு வரவில்லையென்றாலும், அலுவலக கனினியை பயன்படுத்தவில்லையென்றாலும், நான் அவர் வந்ததாகவும், கனினியை பயன்படுத்தியதாகவும் நிர்பந்தத்தின் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 845/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 13/PW- 11 |
| Name | : திருமதி. எஸ். விஜயா |
| Father/Husband's Name | : முருகன் |
| Village | : 1/33, சாலை தெரு |
| Taluk | : சட்ராஸ், கல்பாக்கம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2026.

PADW for Accused. Counsel for the accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது அறிவியல் துறையில் ஜிஎஸ்ஓ கல்பாக்கத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.04.2022 அன்று ஒரு மெயில் எனக்கும், அலுவலகத்திலிருக்கும் அனைவருக்கும் வந்தது. என்னுடைய பர்சனல் மெயில் ஐடிக்கும், அலுவலக மெயில் ஐடிக்கும் அந்த மெயில் வந்தது. எங்கள் டைரக்டரின் பெயரை குறிப்பிட்டு அவருடைய மெயில் ஐடியிலிருந்து வருவது போல் அந்த மெயில் இருந்தது. 5 படங்கள் அந்த மெயிலில் இருந்தது. எங்கள் டைரக்டர் பெயர் மனோகரன். அந்த மெயில் ஐடி victormanokaran24@gmail.com லிருந்து vijayas@igcar.gov.in என்ற எனது மெயில் ஐடிக்கு வந்தது. மேலும் அந்த மெயில் svijaya16@yahoo.co.in என்ற எனது பர்ச்சனல் மெயில் ஐடிக்கும் வந்தது. அதை பார்த்துவிட்டு எங்கள் நண்பர்களுக்குள் என்ன இப்படி அனுப்பியிருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டு அமைதியாக இருந்துவிட்டோம். என் அலுவலக அறையில் பணிபுரியும் 5 நபர்களுக்கு அந்த மெயில் வந்திருந்தது. 100 நபர்களுக்கு அந்த மெயில் சென்றிருக்கும்.

அனைவரும் தங்களுக்கு வந்தது பற்றி பேசிக் கொண்டார்கள். போலிசார் எங்களை விசாரணைக்கு அழைத்து எங்களுடைய மெயில் ஐடிக்கு வந்ததா என்று கேட்ட போது வந்தது என கூறினேன். நான் அந்த படங்கள் எனது மெயில் ஐடிக்கு வந்தது என்று கையொப்பம் செய்து கொடுத்தேன். சிசிபி ஆபிசில் எனது மெயில் ஐடியை கொடுத்தேன். அங்கிருந்த பிரிண்டரில் அந்த மெயிலை பிரிண்ட் அவுட் எடுத்து கையொப்பம் பெற்று கொண்டார்கள். சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் அந்த பிரிண்ட் அவுட் தான் அங்கு எடுக்கப்பட்டதாகவும் கூறினார். **அந்த ஆவணம் அதசாஆ 10 (4 தாள்கள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணம் சாட்சிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி இல்லாததால் ஆட்சேபனை செய்வதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் பயன்படுத்தி வரும் கனினி அலுவலகத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது அலுவலகம் கல்பாக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். மனோகர் என்பவர் எங்கள் நிறுவனத்தின் டைரக்டர் என்றால் சரிதான். நான் எனது டைரக்டரை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் வராத மெயிலை வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணினியை பரிசோதனை செய்தால் அந்த மெயில் வந்ததா, இல்லையா என்று அறிந்து கொள்ளமுடியும் என்று சொன்னால் சரிதான். நான் எனது டைரக்டருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணம் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.